முருகப்பெருமான் துணை

**மகான் கணநாதர் நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**21.04.2021**, புதன்கிழமை

1. மனுதர்மம் காக்கும் சக்தியாக
மாதவசியாக வந்த அரங்கனே
ஞானமோடு அன்னதான
நல் தயவுநெறியும் காட்டும் தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் யோகபிரசன்ன ஆசி
ஆசிபட பிலவ தகர் திங்கள்
அட்டம திகதி கணக்கன் வாரம்
(பிலவ வருடம் சித்திரை மாதம் 8ம் நாள், 21.04.2021 புதன்கிழமை)
3. வாரமதில் கணநாதர் யானும்
வழங்குவேன் உலக நலம் காண
பாரமான மக்களின் கருமவினை
பந்தபாச பற்றுவழி அழைத்துச் செல்ல
4. செல்லவே மக்கள் பொறிபுலனில்
சிக்கி கலியின் துன்பமாக
அல்லல் மிகுதி கண்டு வர
அவதிகள் பலவாற் தொடர்ந்தும்
5. தொடர்ந்தும் மீளவகை அறியா
தவிக்கும் கலியுக மக்களே
இடர் வென்று காத்தருள
ஏழாம் படைவீடு ஆறுமுகனுக்கு
6. ஆறுமுகனுக்கு அமைத்து நன்கு
அருளும் ஆறுமுக அரங்கஞானி
பெருமை அருமை கண்டு வர
பேதமில்லா சன்மார்க்க வழியை
7. வழியை ஏற்று வருக
வருத்தம் தரும் வினைகள்
பழிபாவச் செயல்களெல்லாம்
பார்வைபட அரங்கன் ஆசிபட
8. ஆசிபட அகன்று ஓடும்
அனைத்து வினைகளுமே
கூசியே அவரவரை விட்டு
கூறிடுவேன் விலகி மாற்றம்
9. மாற்றம்தரும் ஞான வானாக
மறுமையையே வெல்லும் தன்மை
ஆற்றலாக உருவாக்கியே
அரங்கன் தரும் அமுதும் அருளும்

10. அருளும் அற்புதம் நிகழ்த்தும்
ஆபத்தை உழன்று மீட்கும்
இருளெனும் தீயகதிகள் விலகி
ஏகாந்த சரவணசோதிவழி

11. வழிகாட்ட ஞானிகள் ஆகும்
வாய்ப்பும் வல்லமையும் கிட்டும்
அழியாமை கிட்டி நிலைகள் மாறும்
அறிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–